## 33

# எனது சிலுவை

## மத்தேயு 10:37–39; 16:24–26; மாற்கு 8:34–37; லூக்கா 9:23–25; 14:26, 27; ரோமர் 6:1–11; கலாத்தியர் 2:20, 21; 6:14; பிலிப்பியர் 1:21

*"தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல" (மத்தேயு 10:38).*

இயேசு தமது சிலுவையைக் கொண்டிருந்தார், நீங்கள் உங்கள் சிலுவையைக் கொண்டிருக்கிறீர்கள், நான் எனது சிலுவையைக் கொண்டிருக்கிறேன். அவரது சிலுவையை மேம்படுத்தி உரைப்பது எளிது; உங்களுடைய மற்றும் எனது சிலுவையைப் புறக்கணிப்பதும் சுலபம். நாம் நமது சிலுவையை ஏற்றுக்கொள்ளாவிட்டால், நாம் அவரது சிலுவையைக் கொண்டிருக்க முடியாது. நாம் நமது சிலுவைகளை எடுத்துக்கொள்ளாத வரையில், அவரது சிலுவையானது நமது வாழ்வைப்பொறுத்தமட்டில் வீணானதாக உள்ளது. என்னால் உலகத்தை மாற்ற இயலாதிருக்கலாம், ஆனால் தேவன் என்னை மாற்ற முடியும். எவரொருவரும் எனக்காக நீதியின் பாதையில் நடக்க இயலாது. "மாபெரும் அவரை" பெறுவதற்கு நான் "பெரிய என்னை" தியாகம் செய்தாக வேண்டும். எனக்குள் இருக்கிற கிறிஸ்துவே என்னில் இருக்கும் முற்றிலும் நல்லதாக இருக்கிறது (கலாத்தியர் 2:20, 21). சிலுவையில் இயேசு நமக்குப்பதிலாக மாத்திரமல்ல, ஆனால் *நமக்காகவும்* மரித்தார்.

நாமும்கூட மரிக்க, துன்புற மற்றும் நமது சிலுவைகளைச் சுமக்க வேண்டியுள்ளது. அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்தார்; நாமும் நம்முடைய சிலுவைகளைச் சுமக்க வேண்டும். நாம் கிருபையின் கொடையைக் கொண்டுள்ளோம், ஆனால் நாம் தற்செயல்களையும் கொண்டிருக்க வேண்டும். கிருபை என்பது ஈட்டப்படுவதல்ல, ஆனால் அது நமது முயற்சிகளை நிர்ப்பந்திக்கிறது. இரட்சிப்பு என்பது, "வாரும் இரட்சகரே, ஆனால் வெளியே இரும் ஆண்டவரே" என்பதாக ஒருக்காலும் இருக்க முடியாது. மார்ட்டின் லுத்தர் கிங், Jr. என்பவர், "நாம் சுமக்கிற சிலுவை

நாம் அணியும் கிரீடத்திற்கு முந்தியதாக உள்ளது'' என்று சரியாகவே கூறினார்.[1] உங்கள் கழுத்தைச் சுற்றியுள்ள ஒரு சிலுவை உங்கள் முதுகில் உள்ள சிலுவைக்கு ஒருக்காலும் பதிலியாக இருக்க முடியாது.

''மலிவான கிருபை'' என்று எதுவுமில்லை, மற்றும் மலிவான சிலுவைகள் என்றும் எதுவுமில்லை. சகிப்புத்தன்மையுடன் இருத்தல் சுலப மானது, ஆனால் உண்மையான கிறிஸ்தவ அன்பை நடைமுறைப்படுத்துதல் விலையுயர்ந்ததாக உள்ளது.

நாம் வசனப்பகுதிக்குத் திரும்பிச் செல்லுவோம்: "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்'' (லூக்கா 9:23; மத்தேயு 16:24; மாற்கு 8:34ஐக் காணவும்). என் சிலுவையை எடுத்துக்கொள்ளுதல் என்பதன் அர்த்தம் என்ன?

(1) என்னுடைய சிலுவை என்பது விசேஷமானதாக இருக்கிறது. சிலுவையை எடுத்துக்கொள்ளுதல் என்ற கட்டளை இயேசு ஏற்படுத்தியவற்றிலேயே மாபெரும் வேண்டிக்கேட்டுக் கொள்ளுதல் களில் ஒன்றாக இருக்கக்கூடும். அவரது நிபந்தனை உபதேசரீதியான, சகிக்க இயலாததாக, நாம் நிச்சயமாகச் செய்ய வேண்டியதாக மற்றும் நித்தி யத்திற்கும் மதிப்புடையதாக உள்ளது. நீங்கள், ஒன்று "உள்ளே" அல்லது "வெளியே" இருக்கிறீர்கள் என்று இயேசு கூறினார். "ஆல், மற்றும் அல்லது ஆனால் என்பவற்றை" அவர் கொடுக்கவில்லை. அவர், ''தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்'' என்று கூறினார் (லூக்கா 14:27). அவர், ''அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்'' என்று கூறினார் (லூக்கா 14:33). சிலுவையானது, மரணத்திற்கு அழைக்கிறது. நாம், சுயத்திற்கு, பாவத்திற்கு மற்றும் சமூகத்திற்கு மரிக்க வேண்டும். சிலுவைகள் விலையுயர்ந்தவைகளாக உள்ளன. அடிப்படையில் நாம் மூன்றே மூன்று பிரச்சனைகளைக் கொண்டுள்ளோம்: "என்னுடைய, எனது சுயம் மற்றும் நான்." இந்த மூன்றிற்கும் நாம் மரிக்க வேண்டும்! சிலுவையைப் பற்றிய மேலோட்ட மான கண்ணோட்டங்கள் பலவீனமான கிறிஸ்தவர்களை விளைவிக்கிறது. நாம் சிலுவையுடன் சமாதானம் பேசிக்கொண்டிருக்க முடியாது. கிறிஸ்தவ வாழ்வு என்பது எப்போதுமே சுலபமானதாக, சந்தோஷமானதாக இருப்ப தில்லை. நாம் விலையைச் செலுத்துவோமா? நாம் நமது சுயத்திற்கு மரிப்போமா? நமது சுயத்திற்கு உள்ள உரிமைகளை நாம் விட்டுக்கொடுப்போமா? இயேசு கர்த்தராக இருக்கிறார். நாம் இழந்துபோகப்பட்ட பாவிகளாயிருப்பதை ஒப்புக்கொண்டு அவர்மீது நமது கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தை வைக்க வேண்டும்.

நாம் தேவனை விசுவாசிக்க வேண்டியது அவசியம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். தேவன் நம்மீது நம்பிக்கை வைத்துள்ளார் என்பதை அறிவதும் நமக்கு அவசியமாகும். நிருபங்களை வாழும் வல்லமை சிலுவையின் வரலாற்றில் சுவிசேஷங்களில் காணப்படுகிறது. நாம் காவல் காக்கப்படுவதில்லை - ஆனால் மன்னிக்கப்படுகிறோம். நாம் இரட்சிக்கப்

பட்டது குற்றவாளிகளாக வாழும்படிக்கு அல்ல. நமக்குள் வாழ்கிற தேவன் "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் ... உண்டாக்குகிறவராயிருக்கிறார்" (பிலிப்பியர் 2:13) என்பதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது. கிறிஸ்தவர்கள் கனத்துக்குரிய பாத்திரங்களாக ஆக வேண்டும் (2 தீமோத்தேயு 2:20, 21). நாம் யாவரும் தேவனுடனான நமது சொந்த உறவுகளை மேம்படுத்திப் பராமரிக்க வேண்டும். நாம் சந்தேகத்துடனும் நமது விசுவாசத்தைப் பார்வையிட்டுக் கொண்டும் வாழமுடியாது. நாம் விசுவாசத்துடன் வாழ்ந்து நமது சந்தேகத்தைக் கைவிடவேண்டும்.

*(2) எனது சிலுவை அன்றாடமானதாக உள்ளது.* "அம்மாடி!" அன்றாடமா? கிறிஸ்தவம் என்பது ஒரு வாழ்வு ஆகும் - அது ஒரு கணநேரம் அல்ல. பவுல், "... நான் அநுதினமும் சாகிறேன்" என்று செறிவுடன் கூறினார் (1 கொரிந்தியர் 15:31). வாழ்வு என்பது அன்றாடமானது - கிறிஸ்தவமும் அதுபோன்றதே. நமக்கு அன்றாட உணவு தேவை (மத்தேயு 6:11) மற்றும் அன்றாட ஆவிக்குரிய உணவும் தேவை (நடபடிகள் 17:11; எபிரெயர் 3:13). தொடக்ககால சபையில் அன்றாடம் நபர்கள் சேர்க்கப்பட்டனர் (நடபடிகள் 2:47; 16:5). பாவியொருவர் இரட்சிப்பைப் பெறுவதற்கு, தமக்குத்தாமே மரித்து அன்றாடம் தமது சிலுவையை எடுத்துக்கொள்ள வேண்டும். இவை இரண்டும் தனித்தனியான செயல்களாக இருக்கின்றன, ஒன்றல்ல. "சுயமறுப்பு" என்பதை "சிலுவையைச் சுமத்தல்" என்பதுடன் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

நமக்கு அன்றாடம் மன்னிப்பு அவசியமாயிருக்கிறது. நேற்றைய மன்னிப்பு இன்றைக்கானதாகவோ அல்லது நாளைக்கானதாகவோ இருப்பதில்லை. மனமாற்றத்தில் நாம் ஒருமுறை மரித்து அப்படியே மரித்த நிலையில் இருந்துவிடுவதில்லை. அன்றாட மரணம் என்பது அன்றாடம் தேர்ந்துகொள்ளுதலாக உள்ளது. நாம் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்ட வாழ்வை அன்றாடம் வாழ்கிற கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் ...

... ஒரே ஒரு திசையை நோக்கிக்கொண்டிருக்கிறோம்.
... ஒருக்காலும் திரும்ப இயலாது.
... இனி நமது சுயதிட்டங்களைக் கொண்டிருப்பதில்லை.
... நம்மூலம் கிறிஸ்து சிந்திக்கும் சிந்தையைக் கொண்டிருக்கிறோம்.
... நம்மூலம் கிறிஸ்து அன்பு செலுத்தும் இருதயங்கொண்டிருக்கிறோம்.
... நம்மூலம் கிறிஸ்து பேசுகிற குரலாக இருக்கிறோம்.
... நம்மூலம் கிறிஸ்து ஊழியம் செய்வதற்கான சரீரங்களாக இருக்கிறோம்.

உங்களைக் காட்டிலும் அதிகமாய் தேவைப்படுகிற யாரையேனும் நீங்கள் கண்டறியும்வரை உங்கள் சிலுவையை நீங்கள் சுமந்து செல்லுங்கள் - பின்பு அவரிடத்தில் அதைக் கொடுத்து விடுங்கள். (இதை நீங்கள் ஒருபோதும் செய்யமாட்டீர்கள்.)

*(3) எனது சிலுவை எனது பல சுமைகளில் ஒன்றாக இருப்பதில்லை.*

மிகவும் அதிகமான மக்கள், "இந்தச் சுமை நான் சுமக்க வேண்டிய சிலுவை-யாக இருக்கவேண்டும்" என்று நினைக்கின்றனர். இயேசு, "சிலுவைகள்" என்றல்ல ஆனால் "சிலுவை" என்றுதான் கூறினார். சிலுவை என்பது நாம் எடுத்துக் கொள்ளுகிற ஒன்றாக உள்ளது, இது நாம் "சகித்துகொள்கிற" ஒன்றாக இருப்பதில்லை. இவ்வகையான சிந்தனை கிறிஸ்தவர்களைப் பாதிக்கப்பட்டவர்கள் என்பதாக ஆக்கிவிடுகிறது. கலாத்தியர் 2:20, 21 வசனங்கள் வேத வசனப்பகுதிகளிலேயே மிகவும் "சுயமாய் நிரம்பியுள்ள" வசனப்பகுதியாக உள்ளது; இது வேதவசனப்பகுதிகளிலேயே மிகவும் "சுயமாய் சரணடைந்த" பகுதியாகவும் உள்ளது. இவ்வசனப்பகுதியில் எட்டு தனிச்சிறப்புப் பெயர்ச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. "நான்" என்ற பெயர்ச்சொல்லும் அது தொடர்பான பெயர்ச்சொல்லும் ஆறு முறைகளும், "எனக்குள்" என்ற பெயர்ச்சொல் ஒருமுறையும் "என்னில்" என்ற பெயர்ச்சொல் ஒரு முறையும் காணப்படுகிறது. இதில் முரண்பாடுபோலத் தோன்றும் மாபெரும் விஷயம் என்ன? சுயத்தைச் சிலுவையில் அறைதல் உண்மையான வாழ்வை அனுமதிக்கிறது. மரித்த ஒரு மனிதனை எவரொருவரும் கொல்லவோ துன்புறுத்தவோ இயலாது. நம்மில் சிலர் முற்றிலுமாக மரித்திருப்பதில்லை. எல்லாவற்றிற்கும் மரித்துள்ள மனிதர் ஒருவர் எந்த ஒரு விஷயத்தையும் விட்டுவிடத் திறன்கொண்டிருக்கிறார். கிறிஸ்தவர் ஊழியம் செய்வதற்கு முன்பு, அவர் மரிக்க வேண்டியுள்ளது.

*(4) எனது சிலுவை துன்பமான அல்லது துன்புறுத்துவதில் இன்பம் கண்டதால் ஏற்பட்ட ஒரு தியாக மரணமாக இருப்பதில்லை.* எனது சிலுவை சந்தோஷத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது, அது நம்பிக்கையற்ற "அழிவாகவும் இருளாகவும்" இருப்பதில்லை (யோவான் 15:11-14; ரோமர் 14:17; 15:13; எபிரெயர் 12:2; யாக்கோபு 1:2; 1 யோவான் 1:4; 3 யோவான் 4 ஆகியவற்றைக் காணவும்). நாம் குற்றத்தை பற்றி அறிகிறோம் ஆனால் கிருபையைப் பற்றியும் நன்றியுணர்வைப் பற்றியும் நாம் அறிவதில்லை என்பது கவலைக்குரியதாக உள்ளது. சந்தோஷம் இல்லாமல் சுயதியா கத்தைப் பற்றி போதிக்காதீர்கள். சுவிசேஷச் செய்தியை இன்ப துன்ப நடுநிலைக் கோட்பாடாகக் குறைத்து விடாதீர்கள். சிலுவையை எடுத்துச் செல்லுதல் என்பது எதிர்மறையானதாக இராமல் நேர்மறையானதாக உள்ளது; அது பரிதாபகரமானதாக இராமல் மகிழ்ச்சிக்குரியதாக உள்ளது. அது வலிப்புடன் கூடிய தியாகமரணத்தையல்ல, ஆனால் வெற்றிகரமான வாழ்வை விளைவிக்கிறது. நாம் "தேவனுடைய மன்னிப்பில்" வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம்.

*(5) எனது சிலுவை மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுதலாகவும் மற்றவர் களுடன் இரட்சிப்பைப் பகிர்ந்துகொள்ளுதலாகவும் உள்ளது.* எனது சிலுவையை எடுத்துக்கொள்ளுதல் என்பது மன்னிக்கப்படுதலுக்காக வாழு தலாகவும், மற்றவர்களை மன்னிப்பதாகவும், மற்றவர்களுக்குப் போதித்து ஊழியம் செய்யும்படிக்குச் சுயத்திற்கு மரித்தலாகவும் உள்ளது (1 யோவான் 3:16-18ஐக் காணவும்). சிலுவை என்பது மற்றவர்களை மன்னிக்கும்படி நம்மை அழைத்தலாக உள்ளது. நாம் கொடுக்க மறுப்பவற்றை நாம் பெற

இயலாது. ஒருவர் கிருபையை ஏற்றுக்கொள்ளாத வரையில் அவரால் இரக்கத்தைக் கற்றுக்கொள்ள இயலாது.

ஒவ்வொரு நபரும் இயேசுவின் தியாகத்திற்குத் தாம் எப்படிப் பதில்செயல் செய்வதாக முடிவு செய்யும்போது "சிலுவையின்மீது தமது சொந்தப் புத்தகத்தை எழுதுகிறார்." நான் என்னுடைய புத்தகத்தை எழுதி யிருக்கிறேன்; இப்போது நீங்கள் உங்களுடைய புத்தகத்தை எழுதுங்கள்!

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]Martin Luther King, Jr., "Challenge to the Churches and Synagogues," *Challenge to Religion*, ed. Mathew Ahmann (Chicago: Henry Regnery Co., 1963), 168.